**தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 8 - தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 26 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 47.03 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 41.18 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 5.85 மில்லியன் அதாவது 12.44 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 45.68 | 40.37 | 5.31 | 11.62 |
| மூலதனம் | 1.35 | 0.80 | 0.55 | 40.74 |
| மொத்தம் | 47.03 | 41.18 | 5.85 | 12.44 |

2.2 **முற்பணக் கணக்கு**

2.2.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 00801 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 2.00 | 1.51 | 1.30 | 1.54 | 7.00 | 4.61 |

2.3 **கணக்காய்வு அவதானிப்பு**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. **பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

3.1 **பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடு** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1987 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 13 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேசிய நிதிஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**3.3 நல்லாளுகையும் கணக்காளிப் பொறுப்பும்**

**3.3.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.3.2 உள்ளகக் கணக்காய்வு**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட அகற்றப்பட வேண்டியவைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 346,037 தொகையான பொறுப்புக்கள் தீர்க்கப்படாத பொறுப்புக்களாகக் காணப்பட்டபோதும் ஒதுக்கீட்டுக் கணக்கில் தீர்க்கப்படாத பொறுப்புக்களாக ரூபா 251,742 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 94,295 தொகையான பொறுப்புக்கள் குறைத்து ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 3.5 செயலாற்றல்

ஆணைக்குழுவின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு செயற்பாடற்றுக் காணப்பட்ட காலம்

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் உத்தியோகபூர்வ பதவிக் காலம் 2015 பெப்ரவரி 21 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் மீண்டும் அங்கத்தவர்கள் நியமிக்கப்படாமையினால் 08 மாதங்கள் அளவிலான காலம் ஆணைக்குழு செயற்பாடற்றுக் காணப்பட்டது. அந்தக் கால எல்லையின் போது ஆணைக்குழு தார்பிக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறைப்பாடுகளின் புலனாய்வு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 11 அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 467 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

| முறைப்பாடுகளின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பொலிசினால் நடவடிக்கை எடுக்காமை | 150 |
| தாக்குதல் | 10 |
| சித்திரவதை செய்தல் | 02 |
| அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 113 |
| பெண்களையும் சிறுவர்களையும் துன்புறுத்துதல் | 108 |
| ஏனைய | 34 |
| இலஞ்ச ஊழல் | 02 |
| பக்கச் சார்பு | 08 |
| பொய்க்குற்றம் சாட்டுதல் | 19 |
| சட்டரீதியற்ற வகையில் தடுத்துவைத்தல் | 21 |
| மொத்தம் | 467 |

மீளாய்வாண்டின் போது அந்த முறைப்பாடுகளில் 76 அல்லது 16 சதவீதம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 391 முறைப்பாடுகள் அதாவது 84 சதவீதம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தர | ஒப்பந்த | |
| சிரேஷ்ட நிலை | 25 | 03 | 13 | 09 |
| மூன்றாம் நிலை | 03 | 01 | - | 02 |
| இரண்டாம் நிலை | 50 | 32 | 02 | 16 |
| ஆரம்ப நிலை | 16 | 12 | - | 4 |
| மொத்தம் | 94 | 48 | 15 | 31 |